தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 08.05.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இளங்கலை மாணவர் சேர்க்கை 2019-2020

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 2019ம் ஆண்டுக்கான இளங்கலை மாணவர் சேர்க்கை விண்ணப்பிப்பதற்கான இணையதளத்தினை பேராசிரியர் முனைவர் நீ. குமார் துணைவேந்தர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

அச்சமயம் முனைவர் அ.சு. கிருட்டினமூர்த்தி, பதிவாளர், முனைவர் ம. கல்யாணசுந்தரம் முதன்மையர் (வேளாண்மை), முனைவர் புகழேந்தி முதன்மையர் (தோட்டக்கலை), முனைவர் கென்னடி முதன்மையர் (பட்டமேற்படிப்பு), த. ரகுசந்தர் முதன்மையர் (மாணவர் நல இயக்ககம்) ஆகியோர் உடனிருந்தனர்.

இணையவழி விண்ணப்பிப்பதற்கான செயல்பாடு ஆரம்பித்த 3 மணி நேரத்தில் 4,000க்கும் அதிகமான மாணாக்கர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர். மேலும் மாணவர்களுக்கு உதவும் விதமாக பல்கலைக்கழக அனைத்து உறுப்புக் கல்லூரிகள், வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை உதவி மையங்கள் செயல்படுகின்றன.

மக்கள் தொடர்பு அலுவலர்